# ஸ்ரீ நரசிம்ம கவசம் (தமிழ்)

## Sri Narasimha Kavacham

பி. ஸ்ரீதேவிபிரசாத்

psdprasad.music@gmail.com

PSD PRASAD

May 2023



ஸ்ரீ நரசிம்மனே ! நாராயணனே !

பரப்ரம்மனே ! எம் பரந்தாமனே !

நரஹரி உருவாய் நானிலம் வந்து

நலங்களை அருளும் பரிபூரணனே !

எம்மைக் காத்தருள் செய்திடவே நீ

சிம்மனே சீக்கிரம் வருக ! வருக !

வருக ! வருக ! நரஹரி வருக !

தருக ! தருக ! நலங்களைத் தருக !

சிம்ம முகம் படைத்த சூரனே வருக !

இம்மைப் பயன் தரும் இறைவா வருக !

ஞாலம் போற்றிடும் நாரணா வருக !

காலம் நடத்தும் காரணா வருக !

*********

வஜ்ர தேகனே வருக ! வருக !

வஜ்ர நகத்தினா வருக ! வருக !

வரம் தருவோனே ! வருக ! வருக !

வசுதேவன் தனையா ! வருக ! வருக !

விரிந்த விழிகள் பேரொளி காட்ட..

விரைந்தெனைக் காக்க சிம்மா வருக !

அர்ச்சனை செய்தோம் ! வருக ! வருக !

கர்ஜனை செய்தே வருக வருக !

PSD PRASAD

ஸ்ரீ விஷ்ணு வடிவே ! வருக ! வருக !

ஸ்ரீ லட்சுமி பதியே ! வருக ! வருக !

மாசிலா மணியே ! வருக ! வருக !

மங்கலம் யாவும் தருக ! தருக !

******

நாராயணனே ! என்றுன் நாமம்

நாளும் சொன்னான் ஸ்ரீப்ரகலாதன் !

"யாரவன்? எங்கே இருக்கிறான்?" என்று

ஆணவத்தோடு கேட்டான் இரணியன்

"தூணிலும் இருப்பான் ! துரும்பிலும் இருப்பான்!

ஏனிந்த கேள்வி? எனபதில் கிடைக்க...

சீற்றம் கொண்டு சீறிப் பாய்ந்து

ஆற்றலாய் தூணை உடைத்தான் இரண்யன் !

"படபட" வெனவே பிளந்தது தூணே !

"கடகட" எனவே அதிர்ந்தது வானே !

"தக தக" எனவே ஜொலித்திடும் சிம்மம்

"கக கக" சிரிப்புடன் நின்றது முன்னே !

திறு திறு எனவே இரணியன் திகைக்க...

விறு விறு என்றே அவன்மேல் பாய்ந்து

மடியினில் இட்டு வயிறினைப் பிளந்து

முடிவினைக் காட்டிய நரஹரி தேவே !

PSD PRASAD

கருவினில் உதித்தால் தாமதம் ஆகும்

கருடனில் பறக்க சிலநொடி ஆகும் !

கணத்தினில் பக்தனைக் காப்பதற் காக

கல்தூண் அதிலே தோன்றிய உருவே !

*****

சிங்கத்தின் தலையோன் சிரத்தினைக் காக்க !

மங்கல முகத்தோன் என்முகம் காக்க !

தங்கமாய் ஜொலிப்போன் தோல்களை காக்க !

அங்கம் யாவையும் ஸ்ரீஹரி காக்க !

நாசியை நலமுடன் நரஹரி காக்க !

பேசிடும் வாய்தனை பெருமான் காக்க !

கூசிடும் ஒளியோன் கண்களைக் காக்க !

கேசரி ஒலியினன் செவிகளைக் காக்க !

நாரணன் நாமம் நாவினைக் காக்க !

பூரண பலவான் பற்களை காக்க !

உறுமி கனைப்பவன் தொண்டையக் காக்க !

பிடரி அழகினன் கழுத்தினைக் காக்க !

மாசிலாத் தூயவன் இதயத்தைக் காக்க !

மார்பினை ஸ்ரீலட்சுமி நாயகன் காக்க !

வாரித் தருபவன் கரங்களை காக்க !

கூரிய நகத்தினன் நகங்களைக் காக்க !



PSD PRASAD

நாபிக் கமலன் நாபியைக் காக்க !

ஆபத்தில் காப்போன் இடையினைக் காக்க !

நலமுடன் வயிற்றை நரசிம்மன் காக்க !

பலமுடன் முதுகை ம்ருத்யுஞ்சயன் காக்க !

குறியினை என்றும் கேசவன் காக்க !

ஹரி அவதாரன் குதத்தினைக் காக்க !

ப்ரகலாத வரதன் இருதொடை காக்க !

ப்ரபஞ்ச நாயகன் மூட்டுகள் காக்க !

ஸ்ரீ லட்சுமி நேசன் கால்களைக் காக்க !

ஸ்ரீ விஷ்ணு பாதன் பதங்களைக் காக்க !

மங்கல நாயகன் மேனியைக் காக்க !

எங்கும் நிறைந்தோன் இன்னுயிர் காக்க !

நாளை என்றிலாத நரசிம்மனே நீ

கடுகவே வந்து கனிவுடன் காக்க !

வரும்பகல் தன்னில் மாலோலன் காக்க !

அரையிருள் தன்னில் மாதவன் காக்க !

ஏமத்தில் சாமத்தில் ரௌத்திரன் காக்க !

தாமதம் நீக்கி ஐமுகன் காக்க !

காக்க காக்க நரசிம்மன் காக்க !

நோக்க நோக்க அருள்விழி நோக்க...!

PSD PRASAD

தாக்க தாக்க தடையறத் தாக்க !

பார்க்க பார்க்க புண்ணியம் ஆக...

தீமைகள் செய்வோர் முடிவினைக் காண...

தொடர்ந்த பகைகள் புறமுதுகோட..

அல்லல் கொடுக்கும் ஊழ்வினையாவும்

ஜெய நரசிம்மா என்றால் ஓடும்..

பயமும், சினமும் எனைவிட்டோட

ஜெயம் ஜெயம் என்றெதிலும் நான் கொண்டாட

பாடாய் படுத்தும் பிணியவையாவும்

என்னை விடுத்து முப்புறம் ஓட

கோள்களின் தோஷமும் வாராது இருக்க...

கடனால் வந்திடும் கஷ்டங்கள் யாவும்

உடனே தீரும் சிம்மனுன் தயவால்...

இரணியன் போலே ஆணவம் எனக்கு

தரணியில் என்றும் வாராதிருக்க...

பெற்றோர், உறவினர், நட்புகளுடனே

பெற்ற எந்தன் பிள்ளைக ளோடு

போதும் என்னும் மனமதுவோடும்

ஏதும் குறையிலா வாழ்வருள் செய்வாய் !

************

PSD PRASAD

சுவாதி நட்சத்திர திருநாள் தனிலே

செவ்வரளிப் பூவால் அர்ச்சனை செய்தால்

செல்வம் யாவும் சேர்த்தருள்வாயே !

செய்யும் செயல்களில் ஜெயமளிப்பாயே !

விட்டு விட்டு என்வழி விட்டு

தடைகள் எல்லாம் தானாய் விலகும் !

பற்று பற்று சிம்மனின் பாதம்

என்றென் மனமும் நின்பதம் நாடும் !

தந்தையும் நீயே, தாயும் நீயே !

சிந்தையை சிறக்கும் குருவும் நீயே !

விந்தைகள் புரியும் தெய்வமும் நீயே !

எந்தனுக் கெல்லாம் நரசிம்மா நீயே !

அகோபிலம் தனிலே ஏழிலுடன் உறையும்

மகா விஷ்ணு வடிவே ! ஸ்ரீ நரசிம்மா !

மனோபலம் அருள்வாய் ! மாலோல தேவா !

***************

வாழ்க ! வாழ்க ! நரசிம்மன் வாழ்க !

வாழ்க ! வாழ்க ! நரஹரி வாழ்க !

வாழ்க ! வாழ்க ! ப்ரகலாத வரதன் !

வாழ்க ! வாழ்க ! புருஷோத்தமனே !

PSD PRASAD

எத்தனை பிழைநான் செய்திடும் போதும்

அத்தனையும் பொறுத்து நல்வழி செய்வாய் !

அல்லவை யாவும் அழிந்திட செய்வாய் !

நல்லவை யாவும் வளர்ந்திட செய்வாய் !

ஸ்ரீ நர சிம்மனின் கவசம் இதனை

சமர்ப்பணம் செய்தேன் உன்னரு ளாலே !

ஏற்றருள் செய்வாய் படிப்பவர் க்கெல்லாம்

ஏற்றம் தந்து காத்தருள் செய்வாய் !

ஸ்ரீ ஜெய சிம்மன் திருவடி போற்றி !

மாதவன் மோஹனன் இணையடி போற்றி !

வஜ்ர ஸ்தம்பன் விரைகழல் போற்றி !

வரம் தரும் தேவான் திருத்தாள் ! போற்றி

தேவர்கள் போற்றிடும் தேவா போற்றி !

கேசவம் வடிவே சிம்மா போற்றி !

வெற்றிகள் கொடுக்கும் வீரா போற்றி !

மூவுல காளும் கோவே போற்றி !

மங்கலம் வழங்கும் மாதவா சரணம் !

சங்கடம் நீக்கும் சிம்மனே சரணம் !

சரணம் சரணம் கோவிந்தா சரணம் !

சரணம் சரணம் நாரணா சரணம் !

PSD PRASAD